[13th December 1961

Local cess surcharge

*** 2315-A Q.—SRI S. M. ANNAMALAI :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1958-ம் வருஷத்திய பஞ்சாயத்துச் சட்டப்படி சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எல்லா பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் களிலும் Local cess surcharge விதித்துள்ளார்களா?

(இ) அப்படியாயின், எந்த அளவுக்கு விதித்துள்ளார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Yes. Out of 75 panchayat unions launched during last year, all except Sriperumbudur have levied Local cess surcharge. Regarding Sriperumbudur particulars are not readily available.

(இ) The levy ranges from 10 nP. to 75 nP. per rupee of land revenue and the anticipated annual revenue for all the 74 unions will be Rs. 26,21,939.

SRI S. M. ANNAMALAI : லோகல் செஸ் சர்ச்சார்ஜ் 10 நயா பைசாவிலிருந்து 75 நயா பைசாவரையில் விதிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டது. ஆனல், உடனடியாக எடுத்த எடுப்பி லேயே ரூபாய்க்கு முக்கால் ரூபாய் இந்த சர்ச்சார்ஜ் போட்டால் மக்களிடையே பெரும் அதிருப்தி ஏற்படுகிறது. பஞ்சாயத்துச் சட்டத்தில் 25 நயா பைசாவுக்குக் குறையாமல் விதிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி, எடுத்தவுடனே 25 நயா பைசாதான் போடவேண்டும், அடுத்த ஆண்டுகளில் வேண்டு மானல் உயர்த்திக்கொள்ளலாம் என்று சர்க்கார் உத்தரவு பிறப்பிக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : பஞ்சாயத்து யூனியன் கள் பொறுப்புள்ள சபைகள் மக்களால் தேர்ந்தெடுக்கப் படுபவை. இந்தப் பொறுப்பை அவர்களுக்கே விட்டுவிட வேண்டும். அந்தப் பகுதியிலே எவ்வளவு காரியங்கள் செய்ய வேண்டும் என்று திட்டம் போட்டு, அதற்குத் தகுந்தார்ப்போல் சர்ச்சார்ஜ் போட முடிவு செய்கிருர்கள். இதைப் போட்டு வீட்டுக்கு அவர்கள் எடுத்துப் போய் விடுவதில்லை. பல திட்டங் கள் அந்தப் பகுதியில் நிறைவேற, இந்த சர்சார்ஜ் போடப்படு கிறது. இதைப் போடும்போது மக்களுடைய பிரதிநிதிகளாக இருப்பவர்கள் மக்களைக் கலந்தாலோசித்துத்தான் பல இடங்களில் செய்கிருர்கள். அம்மாதிரி வரி விதித்துப் பல திட்டங்களை நிறை வேற்றுகிருர்கள் என்ருல், இது வரவேற்கத் தக்கதே.

Municipal Elementary School, Pudukottai

*** 2315-B Q.—SRI V. ARUNACHALA THEVAR :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

புதுக்கோட்டையிலுள்ள நகராண்மை ஆரம்பப் பள்ளிக் காகத் தனியாக ஓரிடத்தை அரசினர் ஏற்பாடு செய்துள் ளார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.